**முக்கிய தகவல்கள் ஆவணம் (KFD) -  விற்றல் (ரியல் எஸ்டேட்)**
**இலங்கை மெர்ச்சண்ட் வங்கி மற்றும் பினான்ஸ் பிஎல்சி நிறுவனம்**

**1. உற்பத்தி – ரியல் எஸ்டேட்**

குடியிருப்பு/வர்த்தக சொத்துகளை கொள்வனவு செய்து தமது தனிப்பட்ட மற்றும் வர்த்தக தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பலதரப்பட்ட நிதித் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் ரியல் எஸ்டேட் வாடிக்கையாளர்களுக்கு தேவையான நிதி உதவிகளை வழங்குவதே இந்த உற்பத்தியின் நோக்கமாக அமைந்துள்ளது.

**2. முக்கிய அம்சங்கள் மற்றும் பயன்கள்**

a) இலகு கொடுப்பனவு திட்டங்களுக்கு கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள்
b) கவர்ச்சிகரமான விலைக் கழிவுகள்
c) குறைந்தபட்ச கடன் வழுங்கல் காலம்
d) 7 ஆண்டுகள் வரையான மீள் செலுத்தும் தவணைகள்
e) துரித வாடிக்கையாளர் சேவை

**03. வட்டி விகிதங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள்**

காலத்திற்கு காலம் மாறும் சந்தை நிலவரங்களின் அடிப்படையில் ALCO குழு மற்றும் ரியல் எஸ்டேட் குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானத்திற்கமைய வட்டி விகிதங்கள் தீர்மானிக்கப்படும். வாடிக்கையாளர்களினால் மாதாந்த தவணைகள் செலுத்தத் தவறும் பட்சத்தில், கடிதத் தொடர்பு மற்றும் சட்ட கட்டணங்களுக்கு வாடிக்கையாளர்களிடமிருந்து பிற கட்டணங்களை நாம் அறவிடுவோம்.

**04. அபராத வட்டி**

வாடிக்கையாளர் ஒருவர் மாதாந்த தவணைகளை வழக்கமாக செலுத்தத் தவறும் பட்சத்தில், அபராதங்களை விதிக்க நிர்பந்திக்கப்படுவோம்.

**05. பின்பற்ற வேண்டிய நடைமுறை**

ஆர்வமுள்ள அனைத்து வாடிக்கையாளர்களும் காணி விற்பனைத் திட்டங்களுக்கு அருகாமையிலுள்ள கிளைக்கு வருகை தந்து தமது தேவைகள் குறித்து கலந்துரையாட முடியும். கலந்துரையாடலின் பின்னர் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கேற்ப, விற்பனை குழுவினால் மதிப்பீடு, ஒப்புதல் மற்றும் நடைமுறைகள் ஆகியன ஆரம்பிக்கப்படும்.

**<u>அங்கீகரிக்கப்பட்ட DOA இற்கமைய அனுமதி பெற்றுக்கொள்ளப்படும்</u>**

**<u>*முழு பணக் கொடுப்பனவுக்கு தேவையான ஆவணங்கள்</u>**

- 18 **வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜையான இருத்தல்.**
**- தேசிய அடையாள அட்டையின் பிரதி**
-  KYC
**- கொடுப்பனவு ஆதாரம்**
**- வங்கி விபரங்கள்**

***இலகு கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு தேவையான ஆவணங்கள்**

**தனிப்பட்ட வாடிக்கையாளர்கள்**
- முறையாக பூர்த்தி செய்யப்பட்டவிண்ணப்ப படிவம்
- தேசிய அடையாள அட்டையின் பிரதி
- கொடுப்பனவு ஆதாரம்
- கடந்த 06 மாதங்களுக்கான வங்கிக்கூற்று அறிக்கைகள் (தனிநபர் மற்றும் வர்த்தகம்)
- சம்பளச் சீட்டு / விபரங்கள்
- பணப் பாய்ச்சல் அறிக்கைகள் / வருவாய் செலவு அறிக்கைகள்
- ஏனைய வருமானச் சான்று ஆவணங்கள்

**கூட்டாண்மை வாடிக்கையாளர்கள்**

**வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கம்பனிகள் / பட்டியவிடப்பட்ட கம்பனிகள்**

- ஒருங்கிணைப்புச் சான்றிதழ்
- நிறுவன சார் கட்டுரைகள்
- படிவம் 1, புதிய படிவம் 13, படிவம் 15, படிவம் 20 மற்றும் ஏனையவற்றின் பிரதிகள்.
- வரி கொடுப்பனவு பற்றுச்சீட்டுகள் / வருவாய் வரி (புதியது)
- BR பிரதி (இருப்பின்)
- நிர்வாக சபை தீர்மானங்கள்
- கடந்த மூன்று ஆண்டுகளுக்கான தணிக்கை கணக்குகள்

**06. பிரதான நிபந்தனைகள் மற்றும் விதிமுறை தகைமைகள்**

அ) 18 வயதுக்குமேற்பட்ட இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
ஆ) கடன் பெறுபவரின் நிதிப் பெறுமதி மற்றும் மீள் கொடுப்பனவு திறன், வர்த்தக / சொத்துப் பெறுமதி / CRIB செயல்திறன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் திட்டத்திற்கு அனுமத வழங்கப்படும்.

**07. உற்பத்திகள் / சேவைகளுடன் தொடர்புடைய பொருத்தமான சட்ட ரீதியான ஏற்பாடுகள்**

- இலங்கையின் பொதுவானச் சட்டம்
- இலங்கையில் பொருந்தும் ஒப்பந்தச் சட்டம்
- இலங்கையில் பொருந்தும் காணி சட்டக் கொள்கைகள்
- தலைப்பு பதிவுச் சட்டம் மற்றும் ஆவணங்களின் கட்டளைச் சட்டம்
- மோசடி தடுப்பு கட்டளைச் சட்டம்

**08. முறைப்பாடுகளை கையாளும் முறை**

தயவு செய்து வாடிக்கையாளரின் முறைப்பாடுகளை வாடிக்கையாளர் முறைப்பாடுகளை கையாளும் பிரதான நபருக்கு அறியத்தருங்கள் - பிரதி பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் ரியல் எஸ்டேட் பிரிவுக்கு முறைப்பாடு அறியத்தரப்படும்**.**

சந்தேகத்துக்குரிய பரிமாற்றல்கள் மற்றும் வரம்புக்கு மீறிய பரிமாற்றல்கள் (1 மில்லியனுக்கு மேல்) தொடர்பில் நிதிப் புலனாய்வு பிரிவுக்கு அறிக்கையிடப்பட வேண்டும்.